# 13 சமய குரவர் நால்வர்

சைவசமய வரலாற்றில் சமய குரவர்கள் நால்வரின் பணி மகத்தானதாகும். சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்கு மேலோங்கியதுடன், அச்சமயங்கள் சார்ந்தவர்கள் சைவ சமயத்தைக் கடைப்பிடிப்பவர்களைக் கொடுமைப்படுத்திய வேளை, சைவ சமயமே மெய்ச்சமயம் என்பதை தமது சாதனைகள் மூலம் நிரூபித்துக்காட்டி, மீண்டும் சைவத்தை புத்தெழுச்சிபெறச் செய்தவர்களே சமய குரவர்கள் நால்வருமாவர். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக நாயனார் ஆகியோரே அந்நால்வருமாம்.

சிவபெருமானின் இருப்பினை மறுதலித்து, நாத்தீகம் பேசியவர்களை வேத சிவாகமங்களைத் துணைகொண்டு தர்க்கரீதியாக எதிர்வாதம் புரிந்ததோடு, புராண இதிகாசங்களில் காணப்படும். இறைவனின் பல்வேறு திருவிளையாடல்களையும் அருட்செயல்களையும் எடுத்துக்காட்டி சைவக்கடவுளர்களின் மேன்மையினை மக்கள் தெரிந்து, இறைவன்மீது பக்தி செலுத்துவதற்கு வழிகாட்டினார்கள்.

பல்வேறு பிரிவுகட்குட்பட்டுக்கிடந்த மக்களைத் தட்டியெழுப்பி ''கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகின் அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளரே'' என ஒற்றுமைப் படுத்தியவர்கள். மேலும் பாதயாத்திரை மூலம் திருத்தல வழிபாட்டினை தமது திருப்பதிகங்கள் வாயிலாக நிலைநாட்டினர். நாதியற்ற மக்களுக்கு பல அற்புதங்களை இறையருளால் நிகழ்த்திக்காட்டி நம்பிக்கையூட்டினர். கிரியைகளும் சடங்குகளுமே என்றிருந்த காலத்தில் அவரவர் பக்குவநிலைக்கும் தகுதிக்கும் ஏற்ப சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாத நெறிநின்று, வாழ்ந்துகாட்டிய நால்வரின் பணி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக இன்றும் திகழ்கின்றது. பன்னிரண்டு திருமுறைகளுள் முதல் எட்டுத் திருமுறைகளும் நால்வரினதும் என்பது மேலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## (அ) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

தமிழ்நாட்டிலே சீர்காழி என்னும் ஊரில் சிவபாத விருதையருக்கும், பகவதி அம்மையாருக்கும் அருந்தவப் புதல்வராக ஆதிரை நன்நாளில் பிறந்தார். கருவிலே திருவுடைய குழந்தை என்பதை அக்குழந்தையின் மூன்றாம் வயதில் நடந்த அற்புதச் சம்பவம் எடுத்துக் காட்டியது.




சிவபாதவிருதையர் திருக்குளத்தின் படிக்கட்டில் இருத்திவிட்டு, நீரில் இறங்கி மூச்சினை நீண்டநேரம் அடக்கி மூழ்கியிருந்தார். தந்தையாரை நீண்டநேரம் காணாமல்

பதறிய குழந்தை திருக்கோவிலில் இருந்த சிவனையும் உமையையும் பார்த்து, 'அம்மையே, அப்பா' என்று வெம்பி வெம்பி அழுதது. குழந்தையின் அழுகைக்கு இரங்கிய இறைவனும் இறைவியும் அம்மையப்பராகக் குழந்தைமுன் தோன்றினார்கள். உமாதேவியார் பொற்கிண்ணத்தில் திருமுலைப்பாலை பருகக் கொடுத்தருளினார். அழுதபிள்ளை ஆவலுடன் பாலைப் பருகியது.

நீராடி வந்த சிவபாதவிருதையர் தமது குழந்தையின் வாயில் பால்வடிந்திருப்பதனைக் கண்டு கோபமுற்று, ''யார் தந்த பாலைப் பருகினாய்'' என்று சிறு தடிகொண்டு அதட்டினார். அப்பொழுது விண்ணிலே காட்சியளித்துக் கொண்டிருந்த அம்மையப்பரைச் சுட்டிக்காட்டி, ''தோடுடைய செவியன்...'' என்ற பதிகத்தைப் பாடியது ஞானக்குழந்தை. தந்தையார் இறைவனின் அருட்செயலை உணர்ந்து மகிழ்வுற்றார். குழந்தையை அழைத்துச் சென்று தோணியப்பரை வணங்கினார். இவ்வருட்செயலால் ஞானசம்பந்தர், பாலறவாயர், ஞானக்குழந்தை, ஆளுடைய பிள்ளையார், திருஞானசம்பந்தர் எனும் பெயர்களைப் பெற்றது அக்குழந்தை. இனிமேல் சம்பந்தர் என்றே அக்குழந்தையை அழைப்போம்.

ஞானசம்பந்தர் திருக்கோலக்கா திருத்தலத்தை அடைந்து, தமது பிஞ்சுக்கைகளினால் தாளம்போட்டு ''மடையில் வாளை...'' என்னும் பதிகத்தைப் பாடினார். சம்பந்தரின் தளிர்கரம் வருந்தாமலிருக்க இறைவன் அருளால் ஐந்தெழுத்துப் பொறிக்கப்பட்ட 'பொற்றாளம்' கிடைத்தது. அத்தாளத்தில் ஒலி எழவில்லை என்பதற்காக சம்மந்தர் வருந்தாமலிருக்க இறைவி ஓசைகொடுத்தமையினால் 'ஓசை கொடுத்த நாயகி' என இறைவி அழைக்கப்படுகின்றார்.

சிதம்பரத்திற்கு அருகேயுள்ள திருவெருக்கத்தம்புலியூரில் உள்ள திருநீலகண்டப் பெரும்பாணர் சீர்காழிக்கு வந்து, சம்பந்தரை வணங்கிப் பாடல்களை யாழிசைத்துப் பாடினார். அதனைக் கேட்டு மகிழ்ந்த சம்பந்தர் தாம் பாடும் பதிகங்களை யாழில் பாடுமாறு பாணரை வேண்டினார். அன்று முதல் சம்பந்தர் பாடும் பதிகங்களை பாணர் யாழ்மீட்டி வாசிப்பது வழக்கமாயிற்று.

சம்பந்தர், திருவரத்துறையை வணங்குவதற்காக தந்தையாரின் தோளிலிருந்து இறங்கி நடந்துசென்றார். நடப்பதற்குக் கஷ்டப்பட்டு மெதுவாகவே நடந்து மாறன்பாடியை அடைந்து, அன்றிரவு அங்கேயே துயில்கொண்டார். சம்பந்தரின் பொற்பாதங்கள் கொப்பழித்து வருந்துவதைப் பொறுக்காத அரத்துறைநாதர், அவ்வூர் அடியவர் கனவில் தோன்றி, ''ஞானசம்பந்தன் நம்மிடம் வருகின்றான். அவனுக்குக் கொடுப்பதற்காக முத்துச் சிவிகையும் முத்துக்குடையும் முத்துச் சின்னங்களும் நம் திருக்கோவிலில் வைத்திருக்கின்றோம். நீங்கள் அவற்றை அவன்பாற் கொண்டு செல்லுங்கள்'' என்று பணித்தார்.


அடியவர்கள் இறைவனை வணங்கி, அவற்றை சம்பந்தரிடம் எடுத்துச் சென்றனர். சம்பந்தர் ஐந்தெழுத்தோதி சிவிகையில் எழுந்தருளினார். திருவரத்துறையை அடைந்து இறைவனை வணங்கி, ''எந்தை ஈசன் எம்பெருமான்'' என்று தொடங்கிப் பதிகம் பாடினார். இங்கு இறைவனால் வழங்கப்பட்ட விருதுகள் யாவும் ஆசாரியத்

தகுதி பெற்றவர்க்கே உரித்தானதாகும். ஆகையினால் சிவனருளால் சம்பந்தர் சமயத்தின் முதற்குரவரானார்.

அடியவர்கள் அனுபவிக்கும் பிணி, துன்பம் என்பவற்றினை இறையருளால் நீக்கியருளும் அற்புதச் செயல்களையும் சம்மந்தர் நிகழ்த்திக்காட்டினார். அதன் மூலம் அடியார்கள் புத்தெழுச்சி பெற்று, சைவசமய வாழ்வில் உறுதியுடன் தொடரக்கூடியதாக இருந்தது.

திருவீழிமிழலையில் நாவுக்கரசருடன் பதிகம்பாடி படிக்காசுபெற்று பஞ்சம்பிணி போக்க அடியவர்க்கு அன்னதானம் செய்வித்தமை, பின்னர் இருவரும் திருமறைக்காட்டில் பதிகம்பாடி நாவுக்கரசர் திருக்கதவு திறக்கப்பாட, சம்பந்தர் ''சதுரம் மறை'' எனும் பதிகம்பாடி திருக்கதவு அடைக்கச் செய்தமை சம்பந்தரும் நாவுக்கரசரும் சேர்ந்து நிகழ்த்திய அற்புதங்களாகும்.

கூன்பாண்டிய மன்னன் சமண சமயத்தில் சேர்ந்து, சைவசமய மக்களை வருத்துவதை அம்மன்னன் மனைவி மங்கையற்கரசியாரின் தூதுவரான, முதன்மந்திரி குலச்சிறையார் மூலம் அறிந்து, மதுரையிலுள்ள மடத்தில் தங்கினார். சம்பந்தர் மதுரை வந்த செய்தியறிந்த சமணர் வெகுண்டு, மன்னன் ஒப்புதலுடன் மடத்திற்குத் தீயிட்டனர். நடந்ததை அறிந்த சம்பந்தர் ''செய்யனே திருவாலவாய்'' என்ற பதிகம்பாடி இறுதியடியாக ''பையவே சென்று பாண்டியனுக்காகுக'' என்றார். மடத்தில் எரிந்த தீ அவிந்து, பாண்டியனுக்கு வெப்பு நோயாகப் பரவியது. நடந்ததை அறிந்த மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும்சம்பந்தரை அழைத்து வெப்புநோய் நீக்க வேண்டிநின்றனர். அதனை யறிந்த சமணரும் போட்டியிட ''யார் நோயை நீக்குகின்றீர்களோ! அவர்களது சமயமே மெய்ச்சமயம்'' என்று கூறினான். சமணர் பல மந்திர தந்திரங்களால் முயன்றும் தீராமல் நோய் அதிகமாக வேதனையளித்தது. இறுதியாக சம்பந்தர் திருநீற்றினை எடுத்து பாண்டியன் மேனியில் பூசி, ''மந்திரமாவது நீறு'' என்று பதிகம்பாட வெப்புநோய் தீர்ந்தது.



வெப்புநோய் நீக்கியமையால் மட்டும் சைவம் மேன்மையடையமாட்டாது, அனல்வாதம், புனல்வாதம் செய்து வெல்லவேண்டும் என்று வாதிட்டனர். அச்சவாலை ஏற்று, ''தளிர் இளவளரொளி'' என்னும் பதிகம் எழுதிய ஏட்டினையும், சமணரும் தமது சமய உண்மையினை எழுதிய ஏட்டினையும் தீயிலிட்டபொழுது, சமணரிட்ட ஏடு எரிந்து சாம்பலானது, சம்பந்தர் இட்ட ஏடு எரியாது இருந்தது. பின்னர் புலன்வாதமாக சமணர் வைகையாற்றில் விட்ட ஏடு, கடலுக்குச்செல்ல, சம்பந்தர் ''வாழ்க அந்தணர்'' என்ற பதிகம் எழுதிய ஏடு கடலுள் செல்லாமல் எதிர்ப்பக்கம் சென்றது. அவ்வேட்டில் ''வேந்தனும் ஓங்குக'' என்றிருந்தமையால் கூன்பாண்டியன் கூன்நிமிர்ந்து, நின்ற சீர்நெடுமாறன் என்ற சிறப்புப் பெயரும் பெற்றான். மன்னன் சைவத்தின் மேன்மையுணர்ந்து, மீண்டும் சைவனானான்.

சம்பந்தப்பெருமான் பல தலங்களையும் தரிசித்துப் பதிகங்கள் பாடி, அற்புதங்களும் நிகழ்த்தி மீண்டும் சீர்காழியை அடைந்தபொழுது, பெற்றோர் திருமணம் செய்யுமாறு மீண்டும் மீண்டும் வற்புறுத்த ஒருவாறு சம்மதித்தார். திருமண நாளில் இறைவனை நினைந்து ''கல்லூர்ப் பெருமணம்'' எனும் பதிகத்தைப்பாட, '' சம்பந்தா நீயும் உன் மனைவியும் திருமணங்காண வந்தவர் அனைவரும் இந்தச் சோதியிற் கலந்து நம்மை வந்தடையுங்கள்'' என்ற அசரீரி கேட்கும்போது, 'சோதி' ஒன்று தோன்றியது. சம்பந்தர் ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'' என்னும் நமச்சிவாயப் பதிகத்தினைப்பாடி, எல்லோரையும் சோதியுட் புகவைத்து, தாமும் மனைவியுன் சோதியுட் கலந்தார். இது நடந்தது ஒரு வைகாசி மாத மூல நட்சத்திரத் தினத்திலாகும். சம்பந்தரின் குருபூசை தினமும் இதுவேயாம்.

## (ஆ) திருநாவுக்கரசு நாயனார்

திருமுனைப்பாடி நகரை அண்டிய திருவாமூரிலே, புகழனாருக்கும் மாதினியாருக்கும் அருந்தவப் புதல்வனாக மருணீக்கியார் பிறந்தார். இளமைக் காலத்திலேயே பெற்றோரை இழந்த மருணீக்கியார், தமது தமக்கையாராகிய திலகவதியாரின் அரவணைப்பில் வளர்ந்து வந்தார். திலகவதியாருக்கு நிச்சயிக்கப்பட்ட மணாளனாகிய கலிப்பகையார் போரில் இறக்க, அக்கால வழக்கப்படி விதவையான திலகவதியார் தானும் உடன்கட்டையேறி இறப்பதற்கு முடிவுசெய்தபோது, மருணீக்கியார் அதற்கு முன்னர் தாம் இறப்பதாக் கூறவே மனம்மாறி தம்பியாருக்காக உயிர்காத்து, சிவதொண்டில் மூழ்கியிருந்தார்.

மருணீக்கியார் கல்வி கேள்விகளில் வல்வராகிய போதிலும் அவருக்கு ஏற்பட்ட வாழ்கை அனுபவத்தால், சமணத்தின்பால் ஈர்க்கப்பட்டு சமணசமயத்தில் சேர்ந்தார். பாடலிபுரத்திலுள்ள சமணப்பள்ளியில் சமணக்கல்வியிலும் புலமைபெற்று, அங்கேயே குருதரத்திற்கு உயர்ந்து 'தருமசேனர்' என்னும் பெயரும் பெற்றார்.

தம்பியாருக்காகவே வாழ்ந்துவரும் திலகவதியார், அச்செய்தி கேட்டு பெரிதும் கவலை கொண்டு, தனது தம்பியை சைவத்திற்கு மீட்டுத் தரும்படி சிவபெருமானிடம் முறையிட்டார். கனவில் தோன்றிய இறைவன் '' உன் தம்பி முன்னர் முனிவராயிருந்து என்னை அடையத் தவம் செய்தவன். அவனுக்குச் சூலை நோய் கொடுத்து ஆட்கொள்வோம்'' என்று கூறியருளினார்.

இறைவன் வாக்குப்படி மருணீக்கியாருக்கு சூலை நோய்வருத்தியது, சமணர்கள் சூலை நோயை நீக்குவதற்குப் பல வழிகளில் முயன்றும் தோன்றனர். இரவோடு இரவாகத் தமக்கையாரிடம் ஓடிவந்து தம் நோயினைப்பற்றிக் கூறி வருந்தினார். மறுநாட்காலை தமக்கையாருடன் திருவதிகை வீரட்டானேசுரரை வணங்கி, நோயை நீக்கி அருளும்படி ''கூற்றாயினவாறு விலக்ககலீர்..'' என்று தொடங்கும் பதிகத்தினைப் பாடினார். உடனே சூலைநோய் நீங்கியது. அசரீரி ஒன்று '' நாவுக்கரசன்'' என்னும் பட்டத்தைச் சூட்டியது.

மன்னன் சமணரின் தூண்டுதலால், நாவுக்கரசரை ஏழு நாட்கள் நீற்றறையில் அடைத்து வைத்தான். ''மாசில் வீணையும் மாலை மதியமும்'' என்னும் தேவாரத்தினைப்பாடி நமச்சிவாய மந்திரத்தினைச் சொல்லியவாறு, நீற்றறையை குளிர்ச்சுனையாக மாற்றி இறையின்பத்தில் திளைத்திருந்தார்.

பின்னர் நஞ்சு கலந்த பாற்சோறு உண்ணக்கொடுத்தனர். நஞ்சுண்ட கண்டனை நினைந்து, அமுதமென வாங்கியுண்டு நலமேயிருந்தார். மதங்கொண்ட யானையை ஏவினர். ''சுண்ணவெண் சந்தணச் சாந்தும்'' எனும் பதிகத்தினைப்பாடி நின்றார் நாவுக்கரசர். கொல்ல வந்தயானை கொல்ல ஏவியவரையே கொன்றொழித்து, கொல்லவந்தவரைப் பணிந்து நின்றது.

இறுதியாக சமணர் அவரைக் கல்லுடன் கட்டி கடலில் போட்டனர். ''சொற்றுணை வேதியன் சோதி வானவன்'' என்று அரும்பெருஞ் சோதியான இறைவனைப் பாடித்துதித்தார் நாவுக்கரசர். இறையருளால் கல் தெப்பமாக மிதந்தது திருப்பாதிரிப்புலியூர் என்னும் சிவத்தலத்தில் கரை சேர்ந்தார். நடந்ததெல்லாம் அறிந்த பல்லவ மன்னன் நாவுக்கரசரிடம் மன்னிப்புப்பெற்று சைவசமயத்தில் இணைந்தான். மீண்டும் சைவம் செழிக்க எண்ணற்ற சிவத்தொண்டுகள் ஆற்றினான்.



இதன் பின்னர் நாவுக்கரசர் தலயாத்திரை மேற்கொண்டு, பல திருத்தலங்களைத் தரிசித்தார். அத்தலங்களில் உள்ள புல், பூண்டுகள், கற்களை உழவாரத்தினால் சுத்தம் செய்தார். இதனைப் பின்பற்றி பல அடியார்களும் அத்திருப்பணியில் ஈடுபட்டமையால் அப்பர் 'உழவாரப் படையாளி' எனச் சிறப்பிக்கப்பட்டார். அப்பர் திருத்தூங்கானை மாடமென்னும் திருத்தலத்தில் ''பிறசமயத்தொடக்குண்டு வருந்திய இவ்வுடலுக்கு, உம்முடைய சூல, இடப இலச்சினைகளைப் பொறித்தருள வேண்டும்'' என விண்ணப்பித்து, ''பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்'' எனுந் திருப்பதிகம் பாடினார். அப்பொழுது இறையருளால் சிவ இலட்சினைகள் தோளில் பொறிக்கப்பட்டன.

அப்பர் திருப்பைஞ்ஞீலியை நோக்கிச் செல்லும்போது பசியினாலும் தாகத்தினாலும் மிகவும் வருந்தினார். அப்பரின் துன்பம் போக்க சிவபெருமான், அவர்வரும் வழியில் சோலையும் குளமும் உண்டாக்கி, சிவனடியார் வடிவத்தோடு பொதிச்சோறு வைத்துக்கொண்டிருந்தார். அவ்விடம் வந்த அப்பரும் திருவமுதுண்டு, களைப்பாறினார். அப்பருடன் கூடவே திருப்பைஞ்ஞீலிவரை சென்ற சிவனடியார் திடீரென மறைந்தார்.

திருக்கைலாய மலையிலே சிவபெருமான் பார்வதியோடு எழுந்தருளியிருக்கும் காட்சியைக்காண, பெரிதும் விருப்புற்றார் நாவுக்கரசர். காசியை அடைந்து, மேலும்செல்ல முடியாமல் தவழ்ந்து சென்ற போது, அவ்விடத்திற்கு முனிவர் வேடந்தாங்கி வந்த சிவபெருமான், அவரின் மனத்திடத்தினைச் சோதிப்பதற்கு,

''தேவர்களும் செல்ல முடியாத கைலாசகிரியை மனிதர்களால் அடைவது எளிதா? நீ திரும்பிச் செல்வதே நல்லது'' என்று கூறினார். தரிசனம் காணாமல் ஊனுடம்பு கொண்டு செல்லேன் என்று தனது மனத்திடத்தைத் தெரிவித்தார் நாவுக்கரசர். முனிவரும் தரிசனம் கொடுத்து, அங்குள்ள தடாகத்தில் மூழ்கி, திருவையாற்றையடைந்து தமது கைலாயத் திருக்கோலத்தைக் காணும்படி கூறியருளினார். நாவுக்கரசரும் அவ்வாறே திருக்கைலாயக் கோலத்தைத் திருவையாற்றில் தரிசித்தார்.

சீர்காழிப்பதியில் நாவுக்கரசரும் சம்பந்தரும் சந்தித்துக்கொண்டனர். சம்பந்தர் நாவுக்கரசரை ''அப்பரே'' என்றழைத்தார். அன்றுமுதல் நாவுக்கரசருக்கு 'அப்பர்' என்னும் திருநாமமும் வழங்கி வரலாயிற்று.


திருவீழிமிழலையில் பஞ்சம் நிலவி மக்கள் பசிப்பிணியால் வாடினர். இதனை அறிந்த அப்பரும் சம்பந்தரும் அங்குள்ள திருத்தலத்தில் திருப்பதிகம்பாடி, படிக்காசு பெற்று பசிப்பிணி போக்கினர்.

திருமறைக்காடு என்னும் திருத்தலம் வேதங்களால் பூட்டப்பட்டு, வேறுவழியால் அடியவர் சென்று வழிபடுவதனை அறிந்து, அவ்விடம் சென்ற அப்பர் ''பண்ணணினேர் மொழியாள்'' திருப்பதிகம்பாடித் திறக்கச் செய்தனர். சம்மந்தர் பதிகம்பாடி மூடச்செய்தார்.

திருப்புகலூர் திருத்தலத்தில், தமக்கு முத்திவேண்டி ''எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ'' என்னும் திருத்தாண்டகத்தைப்பாடி இறைவனைத் துதித்தார் அப்பரடிகள். இவர் சித்திரை மாதச் சதய நட்சத்திரத்தில 81 ஆம் வயதில் இறையடி சேர்ந்தார். ''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்பதற்கு இலக்கணமாக இவரது வாழ்க்கை அமைந்துள்ளது.

**(இ) சுந்தரமூர்த்தி நாயனார்**

இந்தியாவில் உள்ள திருமுனைப்பாடி நாட்டிலே, திருநாவலூரிலே வாழ்ந்த வேதியரான சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் அருந்தவக் குழந்தையாகப் பிறந்தார் நம்பியாரூரர். ஒரு நாள் வீதியிலே விளையாடிக் கொண்டிருந்த நம்பியாரூரரின் அழகைக்கண்ட, அந்நாட்டு அரசனான நரசிங்கமுனையர் அக்குழந்தையை வளர்க்க ஆசைப்பட்டார். அதற்குப் பெற்றோரும் சம்மதிக்க, நம்பியாரூரர் அரண்மனையில் வளர்ந்து வந்தார். திருமணப்பருவத்தை அவர் அடைந்தபொழுது, புத்தூர் சடங்கவி சிவாசாரியாரின் மகளைத் திருமணஞ்செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன.



திருமண நாளன்று திருமணப் பந்தலில், முதியவேதியர்ஒருவர்நம்பியாரூரர் தனக்கு அடிமையென்று வழக்குரைத்தார். நம்பியாரூரர் 'பித்தா' என்று வன் சொல்லால் வாதிட்டார். முதிய வேதியர் சான்றாக

அடிமைசாசன ஓலையைக் காண்பித்தார். கோபமுற்ற நம்பியார் அதனைப்பறித்துக் கிழித்தெறிந்தார். இறுதியில் திரு வெண்ணை நல்லூர் பிராமணர்கள் சபையில் மூல ஓலையும் நம்பியாரூரரின் பாட்டனாரின் கையொப்பமும் ஒன்றெனக்கண்டு, முதியவேதியருக்கு நம்பியயாரூரர் அடிமை என முடிவாயிற்று. நம்பியாரூரர் திகைத்து நிற்க, வேதியர் திருவருட்டுறைக் கோயிலுள் சென்று மறைந்தார். பின்னால் சென்றவர் வேதியரைக் காணாமல் அழைத்தார். அப்பொழுது இடபாரூரராகத் தோன்றி, ''நீ முற்பிறவியில் ஆலாலசுந்தரன் என்ற பெயருடன், திருக்கைலாயத்தில் எனக்குத் தொண்டுசெய்யும் பொழுது அங்கிருந்த அநந்தினி, கமலினி எனும் இரு சேடியப் பெண்கள் மீது விருப்பம் கொண்டமையால், பூவுலகில் பிறக்கும் வினை சூழ்ந்தது. பூவுலக பந்தத்தில் உழலாமல் நீ வேண்டியவாறே தடுத்தாட்கொண்டேன், நம்மை வன்சொல்லால் வைதமையால் வன்றொண்டன் எனும் பெயர் தந்தோம். நம்மைச் செந்தமிழால் பாடுவாயாக'' என்றருளினார். அப்பொழுது நம்பியாரூரர் சிவபெருமானை வணங்கி, ''அடியேன் என்ன சொல்லிப் பாடுவேன்'' என்று கேட்டார். அதற்குச் சிவபெருமான் '' என்னைப் பித்தன் என்றே மொழிந்தனை, ஆதலால் பித்தன் என்றே பாடு'' என்று பணித்தார். நம்பியாரூரர் இறைவனை நினைந்து 'பித்தா பிறை சூடி' என்னும் முதல் திருப்பதிகத்தைப் பாடி அருளினார்.

நம்பியாரூரர் திருவாரூரை நோக்கிப் புறப்பட்டார். சீர்காழியை அடைந்து ''சாதலும் பிறத்தலுந் தவிர்த்தெனை'' என்ற பதிகத்தைப் பாடி வழிபட்டார். பின்னர் திருவாரூரை நோக்கிச் சென்றார். ஆரூரரின் வருகை இறையருளால் அடியவர்க்குத் தெரியவர அவர்கள் பல்வகை வாத்தியங்கள் முழங்க எதிர்கொண்டு வரவேற்றனர். அவர்களை நோக்கி ''கரையுங் கடலும்'' என்று பதிகம் பாடி வணங்கினார்.

பின்னர் திருமூலட்டானத்தைச் சூழ்ந்த திருமாளிகை வாயிலிற் புகுந்து வன்மீகநாதரை வணங்கினார். அவ்வேளையில் ''நாம் உனக்குத் தோழரானோம்; நாம் உன்னைத் தடுத்து ஆட்கொண்ட, அந்த மணக்கோலத்துடன் நீ மண்மேல் விளையாடு'' என்று அசரீரி ஒலி கேட்டது. அன்று முதல் அடியார்கள் அவரைத் தம்பிரான் தோழன் என்றும் அழைக்கலாயினர்.

திருக்கைலாயச் சேடியர் இருவருள் கமலினியார், திருவாரூரில் பரவையார் என்னும் பெயருடன் வாழ்ந்து வந்தார். அவர் திருவாரூர்க் கோயிலுக்குத் தொண்டு செய்து வரும் ஒரு நாளில், சுந்தரர் பரவையாரைக் கண்டார். இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பித் திருமணம் செய்து இல்வாழ்வில் ஈடுபட்டனர்.

திருவாரூர்க் கோயில் 'தேவாசிரியன்' மண்டபத்தில் கூடியிருந்த அடியவர்களைக் கண்டு, ''இந்த அடியார்களுக்கு நான் அடிமையாகு நாள் எந்நாள்'' என்றுள் இறைவனிடம் வேண்டினார். அப்பொழுது இறைவன் காட்சியளித்து, அடியார்களின் பெருமையும், வரலாறும் உணர்த்தி, ''தில்லைவாழ் அந்தனர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்று அடியெடுத்துக் கொடுத்தார். தொடர்ந்து பாடிய சுந்தரர் திருத்தொண்டர் தொகையை நிறைவு செய்தார்.

திருவாரூரிற் பங்குனி உத்தரத் திருவிழாச் செலவுக்குப் பொன் இல்லாமல்

வருந்திய சுந்தரர், மனச்சோர்வுற்று கோயில் மடத்தருகிலுள்ள செங்கட்டிகளிலே தலைவைத்து நித்திரையானார். கண்விழித்துப் பார்த்தபொழுது அவையெல்லாம் பொன்கற்களாக மாறியிருந்தமை கண்டு மகிழ்ந்தார். பின்னர் ''தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்'' என்ற திருப்பதிகத்தைப் பாடினார்.

திருமுதுகுன்றஞ் சென்று இறைவனை வணங்கினார். இறைவன் பன்னீராயிரம் பொன் கொடுக்க, அதனை மணிமுத்து ஆற்றில் போட்டு திருவாரூர்க் குளத்தில் தேடியபோது கிடைக்காமல் ''பொன் செய்த மேனி'' என்னும் திருப்பதிகம் பாடிப் பெற்றார்.

திருக்குருகாவூருக்குச் சென்றபோது வழியில் பசியும் தாகமும் வாட்டி வருந்தினார். இறைவன் அடியவர் வடிவில் தண்ணீரும், பொதிச்சோறும் வழங்கினார். சற்றுநேரம் இளைப்பாறியபின் பார்த்தபோது அடியவரைக் காணாது வியப்படைந்து ''இத்தனையாமாற்றை அறிந்திலேன்'' என்ற பதிகம் பாடினார்.

சுந்தரர் தொண்டை நாட்டிற்கு தலயாத்திரை மேற்கொண்டு சென்றார். திருவொற்றியூரில் கயிலையில் சந்தித்த அநிந்தையார், சங்கிலியார் என்னும் பெயருடன் தொண்டூழியம் செய்து வந்தார். அவரைக் கண்டு திருமணம் செய்யச் சுந்தரர் விரும்பினார். இவர் பரவையார் கணவர் என்பதை அறிந்தமையால், தம்மை விட்டுப் பிரிவதில்லை என்ற சத்தியம் பெற்றபின், திருமணத்திற்குச் சம்மதித்தார்.

சுந்தரரும் சங்கிலியாரும் வாழ்ந்திருந்த காலத்தில், திருவாரூர் பங்குனி உத்தரத் திருவிழாக் காணும் விருப்புடன், சத்தியத்தை மறந்து ஊர் எல்லை தாண்டும் பொழுது, இரு கண்பார்வையும் இழந்து துயருற்றார். அடியவர்களின் உதவியுடன் திருவெண்பாக்கம் அடைந்து, ''பிழையுளன பொறுத்திடுவீர்'' என்ற திருப்பதிகத்தைப் பாட ஊன்றுகோல் கிடைத்தது.

ஊன்றுகோல் உதவியுடன் தலயாத்திரை செய்து, திருக்கச்சியேகம்பநாதரை வணங்கி ''கடையானேன் எண்ணாத'' என்ற பதிகம் பாட, இடக்கண் பார்வை பெற்றார். பின்னர் திருவாரூர் சென்றார். வான்மீகநாதரின் கோலத்தைக் காண்பதற்கு ஒரு கண் போதாமையால் மற்றைய கண்பார்வையும் வேண்டி ''மீளா அடிமை உமக்கே'' என்ற பதிகம்பாடி வலக்கண்பார்வையும் பெற்றார்.

சுந்தரர் சங்கிலியாரைத் திருமணம் செய்தமையை அறிந்து கடுங்கோபமுற்றார் பரவையார். சுந்தரர் சார்பில் சிவபெருமானே சமாதானத் தூதுவராகச் சென்று, பரவையாரைச் சுந்தரருடன் சேர்த்துவைத்தார்.

கழறிற்றறிவார் என்னும் சேரமான் பெருமாள், திருவஞ்சைக்களத்திலிருந்து சேரநாட்டை ஆண்டுவந்தார் . சுந்தரரின் மகிமை அறிந்து அவருடன் நட்புக்கொண்டார் அதனால் சுந்தரரிற்கு 'சேரமான் தோழர்' என்ற பெயரும் ஏற்பட்டது. இருவரும் சேர்ந்து தலயாத்திரை மேற்கொண்டு இராமேச்சரத்தை அடைந்தனர். சுந்தரர் அங்கிருந்தே ஈழநாட்டிலுள்ள திருக்கேதீச்சரத்தை வணங்கிப் பதிகம் பாடினார்.பின்னர்

பல தலங்களுக்குச் சென்று, சேரமானின் வேண்டுகோளுக்கு இணங்கி சேரநாட்டிற்குச் செல்லும் வழியில் காவிரி ஆறு பெருக்கெடுத்தோடியது. சுந்தரர் இறைவனை வேண்டிப் பதிகம்பாட, காவிரியாறு பிரிந்து வழிவிட்டது.

சுந்தரர் சேரநாட்டுச் சிவத்தலங்களை வணங்கிக் கொண்டு சேரமான் பெருமாளோடு வாழுங்காலத்தில், ஒரு நாள் திருவஞ்சைக்களக் கோயிலுக்குச் சென்று, தமக்கு இவ்வுலக வாழ்க்கையை முடித்து முத்தி தரும்படி வேண்டி, ''தலைக்குத் தலைமாலை'' என்னும் பதிகத்தைப் பாடினார் . அப்பொழுது இறைவன் ஆணைப்படி தேவர் கள் வெள்ளை யானையில் சுந்தரரை ஏற்றிக் கயிலைக்குக் கொண்டு சென்றனர் . செய்தி அறிந்த சேரமான் பெருமாளும் தமது வெள்ளைக் குதிரையில் ஏறிச் சுந்தரரைப் பின்தொடர்ந்தார் .

சுந்தரர் தமது 18ஆவது வயதில் முத்தியடைந்தார் . இவரின் குருபூசைத் தினம் ஆடிச் சுவாதி நட்சத்திரமாகும்.

**(ஈ) மாணிக்கவாசக சுவாமிகள்**

திருவாதவூரைச் சேர்ந்த அந்தணரான சம்புபாதசிரியருக்கும், சிவஞான வதியாருக்கும் மகனாக வாதவூரர் பிறந்தார் . வாதவூரர் இளமையிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டிய அரசன் அரிமர்த்த பாண்டியன் அரசவையில் அமைச்சராக வாதவூரர் நியமிக்கப்பட்டார். வாதவூரரின் திறமையையும் பணியையும் கண்டு மகிழ்ந்த மன்னன் 'தென்னவன் பிரமராயன்' என்னும் பட்டத்தினை வழங்கிப் பெருமைப்படுத்தினான். வாதவூரர் அரசியல் மற்றும் சமூகவியற் பிரச்சனைகளுக்கு மதிநுட்பமான தீர்வுகளைக் கண்டபோதிலும் இயல்பாகவே ஆன்மீக விசாரணைகளில் விருப்பம் மிக்கவராகவே இருந்து வந்தார் .

கீழைத்துறைமுகத்தில் அராபியக் குதிரைகளுடன் மரக்கலங்கள் வந்திருப்பதை அறிந்த பாண்டிய மன்னன், அக்குதிரைகளை வாங்கிவரும் பணியை வாதவூரரிடம் ஒப்படைத்தான். அவரும் குதிரைகள் வாங்கும் பொருட்டுப் பரிவாரங்களுடன் செல்லும் வழியில், திருப்பெருந்துறையை அடைந்தார் அவிடத்தை நெருங்கும் பொழுதே வாதவூரர் உலக பந்தங்கள் அறுந்து ஆன்மிக நாட்டம் மிகுதியுற்றதை உணர்ந்தார். மேலும் செல்லும் பொழுது குருந்தமர நிழலில் குருநாதர் ஒருவர் தமது சீடர்களுக்கு உபதேசம் அளிக்கும் காட்சியைக் கண்டார்.தான் மந்திரி, தனக்கு அரசன் இட்ட பணியுண்டு என்பவற்றினை மறந்தார். குதிரை வாங்கக் கொண்டுவந்த திரவியங்கள் அனைத்தையும் குருநாதரின் பாதாங்களின் கீழ் வைத்து, குருநாதரை வீழ்ந்து வணங்கித் தன்னைச் சீடனாக ஏற்றுக்கொள்ளும்படி மன்றாடி நின்றார் . குருநாதரும் தமது சீடராக ஏற்றுக்கொண்டார். வாதவூரர் குதிரைவாங்கும் திரவியங்களைக் குருவுக்கு வழங்கியமையும், பல நாட்களாகியும் அங்கேயே இருப்பதனையும் பணியாளர்கள் மன்னனிடம் சென்று முறையிட்டனர் .

பாண்டியன், வாதவூரரை உடன் அழைத்துவரும்படி தன் ஏவலாளரிடம்

கட்டளை இட்டான். பாண்டிய மன்னனின் கட்டளையை தமது குருநாதரிடம் எடுத்தியம்பினார் வாதவூரர் . அதற்குக் குருநாதர் ''நீ மதுரைக்குப் போ அங்கு ஆவணி மூல நாளில் குதிரைகள் வருமென்று பாண்டியனுக்குக் கூறு'' என்று இயம்பினார் . அரசனுக்கு வழங்குமாறு விலைமதிப்பற்ற மாணிக்கக்கல் ஒன்றையும் கொடுத்தார் . குருவின் சொற்படி வாதவூரர் மதுரைக்குச் சென்றார் .

குருநாதர் கொடுத்த மாணிகத்தினை மன்னனிடம் வழங்கி, ஆவணி மூல நாளில் குதிரைகள் வருமென்ற செய்தியை வாதவூரர் கூறினார் . மன்னனும் மகிழ்ந்து சினந்தணிந்தான். குறித்த தினம் நெருங்கியபொழுது, தமது ஏவலாளரை அனுப்பிக் குதிரைகள் மதுரையை நோக்கி வருவதைப் பார்த்துவரப் பணித்தான். விரைந்து சென்றுபார்த்த ஏவலாளர்கள் குதிரைகள் வருவதற்கான எந்தத் தடயமும் இல்லை என்ற உண்மையினை உரைத்தனர் . கடுங்கோபங் கொண்ட மன்னன், வாதவூரரைச் சிறையிலடைத்து வருத்தினான்.

குறித்த நாளில் சிவபெருமான், காட்டிலுள்ள நரிகளைப் பரிகளாக்கித் தானே தலைமை வணிகனாக மதுரைக்கு வந்தார். மகிழ்ந்த மன்னன் வாதவூரரை சிறைமீட்டுத் தமது வருத்தத்தைத் தெரிவித்தான். அன்று இரவு பரிகளெல்லாம் மீண்டும் நரிகளாகி ஊழையிட்டு களோபரம்பண்ணி, தொழுவத்திலுள்ள பரிகளையும் கடித்துக் குதறின. செய்தியறிந்த மன்னன் அளவில்லா சினங்கொண்டு, வாதவூரரை சுடுமணலில் நிற்கவைத்து, நெற்றியில் கல்வைத்துச் சூரியனைப் பார்க்கவைத்துத் துன்புறுத்தினான்.


இறையருளால் அடைமழை பொழிந்தது. வைகையாறு பெருக்கெடுத்து, ஊர் மனையெல்லாம் அடித்துச் சென்றது. வாதவூரருக்குத் தாம்செய்த துன்பமே அழிவுக்குக் காரணம் எனவுணர்ந்த மன்னன், வாதவூரரை விடுதலை செய்தான். மழை ஓய்ந்தது, வைகையாற்றில் வெள்ளம் வற்றியது. எதிர் காலத்தில் வைகையாறு பெருக்கெடுப்பதைத் தடுப்பதற்குத் தடுப்பணை கட்டுமாறு ஊர் மக்களுக்கு ஆணையிட்டான். அரசனின் அதிகாரிகள் ஆற்றின் கரையினை அளந்து ஒவ்வொரு குடிமக்களுக்கும் உரிய பாகத்தினை அடையாளப்படுத்தினர் . அதன்படி மக்கள் ஒவ்வொருவரும் தத்தம் பங்கினில் அணைகட்டும் பணியில் ஈடுபட்டனர் . பிட்டு விற்று வாழ்ந்து வந்த, சிவபக்தையான ஏழை மூதாட்டியான செம்மனச் செல்வி, தமது பங்கினைக் கட்டுவதற்கு வழியில்லாமல் இறைவனைத் தஞ்சமென இறைஞ்சி நின்றார்.

செம்மனச் செல்விக்கு உதவவும், வாதவூரரின் மாண்பினை உலகுக்கு உணர்த்தவும்; இறைவன் மீண்டும் திருவிளையாடல் செய்யத் திருவுள்ளங் கொண்டார் . சிவபெருமான் கூலியாளாக மாறி தோளில் மண்வெட்டியும், தலையில் கூடையும் சுமந்து, ''கூலியாள் வேண்டுமா?'' என்று கூவிக்கொண்டு செம்மணச் செல்வியின் குடிசைமுன் நின்றார். கூலியாள் கிடைத்ததில் மகிழ்ந்த மூதாட்டி, கூலி கொடுக்க வழியற்றுக் கவலைகொண்டார். குறிப்பறிந்த கூலியாள் '' பாட்டி நீ அவிக்கும் பிட்டில், உதிர் ந்தவற்றை மட்டும் கூலியாகத் தந்தால் போதும்.'' என்ற வார் த்தையால் மகிழ்ந்தார் . பாட்டி அவித்த பிட்டுக்கள் எல்லாம் உதிர்ந்தன. அவற்றினை வயிறு புடைக்க உண்ட கூலியாள், ஒரு பொழி மண்ணைக் கூடையில் இட்டுச் சுமந்துசென்று கரையில் கொட்டியபின், கூடையில் தலை வைத்து உறங்கினார் .

அணைகட்டுவதைப் பார்வையிட வந்த பணியாளர் அதனை அரசனிடம் முறையிட்டனர் . அவ்விடம் விரைந்த மன்னன் நித்திரை செய்த கூலியாளின் முதுகினில், தமது பிரம்பினால் ஓங்கி அடித்தான். என்ன அதிசயம் கூலியாள் மறைய, அடித்த அடி அரசன் முதுகில் பட்டதோடு, அனைத்து ஜீவராசிகளிலும் பட்டது. இறைவன் இடபாரூடராகத் தோன்றி, ''வாதவூரன் பொருட்டே எனது இத்திருவிளையாடல்கள்'' என்று கூறி மறைந்தார் . மன்னன் வாதவூரரின் மகிமையை உணர் ந்து அவர் பாதம் பணிந்தான்.

மன்னனிடம் விடைபெற்ற வாதவூரர், தாயினைத் தேடும் கன்றுபோல குருநாதரைத்தேடி திருப்பெருந்துறைக் குருந்தமர நிழலை அடைந்தார் . அங்கே குருநாதர் சீடர்களுக்குப் பாடம் நடாத்திக் கொண்டிருந்தார் . குருநாதர் பாதங்களைத் தமது கண்ணீரால் கழுவினார். சில நாட்களின் பின்னர் குருநாதர் தமது சீடர் களுக்கு முத்தியளித்தார். அவ்விதமே தானும்பெற வாதவூரர் முயன்ற பொழுது, குருநாதர் சிவபெருமானாகக் காட்சியளித்து ''நீ ஆற்றவேண்டிய பணிகள் உண்டு, அதன்பின் என்னிடம் வா'' என்று கூறி மறைந்தார் .

வாதவூரர் அதன் பின் சிவத்தலங்கள் தோறும் யாத்திரை மேற்கொண்டு குரு நாதரிடம் தாம்பெற்ற அனுபவ ஞானத்தினையும், குருநாதரின் பிரிவாற்றாமையையும் மணிமணிப் பனுவல்களாகப் பாடியமையால் மணிவாசகர் என அழைக்கப் பட்டார். தென்னாட்டுச் சைவர்களிடையே வழங்கிவந்த, நாட்டுப்பாடல் வடிவங்களையும் இசை வடிவங்களையும் ஞானமும் பக்தியும் மிளிர திருவம்மானை, திருச்சாழல், திருவெம்பாவை, திருக்கோத்தும்பி முதலிய பாடல்களாகத் தந்துள்ளார். தம்முடன் சமயவாதம்புரிய வந்தவர்களையெல்லாம் தோற்கடித்தார்.



வாதவூரர் சிதம்பரத்தில் வாசம் செய்யும் காலத்தில், ஓர் நாள்அந்தணர் ஒருவர் அவர்முன்வந்து, ''நீர் பாடிய பாடல்களை ஓத விரும்பி அவற்றை உம்மிடம் கேட்டு எழுதுவதற்கு வந்தேன்'' என்று கூறினர் . வாதவூரர் அப்பாடல்களை மீண்டும் பாட, அந்தணர் ஏட்டில் எழுதினார் . மேலும் அந்தணர் வேண்டுகோளின்படி திருக்கோவையாரும் பாடினார் . யாவும் எழுதிமுடிந்தவுடன் அந்தணர் மறைந்துவிட்டார். அடுத்தநாள் தில்லையம் பெருமானுக்கு பூசை செய்யவந்த பூசகர்கள் கோயிற் படியில் ஏட்டுக்கட்டு இருக்கக்கண்டு வியந்தனர் . அதனை எடுத்துப் பார்த்த பொழுது, ''வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியது'' என்றதோடு 'அழகிய சிற்றம்பலமுடையான்' எனக் கையொப்பமும் இடப்பட்டிருந்தது.

செய்தியறிந்த தில்லைமூவாயிரரிற் பலர் மணிவாசகரிடம் சென்று, ''நீர் பாடிய பாடல்களுக்குப் பொருள் யாது?'' என வினவினர் . அவர்களை அழைத்துச் சென்று சிதம்பர மூலவரான நடராஜப் பெருமானைக் காட்டி, ''இவரே அதன் பொருள்'' எனச்சொல்லி சிதம்பர இரகசியத்துள் கலந்தார் . சிவத்தோடு இரண்டறக் கலத்தலே அப்பாடலின் பொருளென மணிவாசகர் குறிப்பால் உணர்த்தினர் . மணிவாசகர் பாடிய

பாடல்கள் யாவும் திருவாசகமும் திருகோவையாரும் என அழைக்கப்படுகின்றன.

மணிவாசகர் தமது முப்பத்திரெண்டாம் வயதில் ஆனி மக நட்சத்திர நாளில் இறைவனுடன் இரண்டறக் கலந்தார் .

## பயிற்சிகள்

01. சமயகுரவர் நால்வரதும் இளமைப் பெயர் களையும் வேறு பெயர் களையும் எழுதுக.
02. நால்வரும் துன்பமுற்ற சந்தர்ப்பங்களில், எதனைப் பற்றுக்கோடாகக் கொண்டு சாதித்தார்கள் என்பதை உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டுக.
03. நால்வரும் நின்றநெறி, செய்த தொண்டு, அடைந்த முத்தி என்பவற்றினைக் குறிப்பிடுக.
04. தேவார திருவாசகங்கள் சைவநெறியில் வகிக்கும் முக்கியத்துவம் ஐந்தினைக் குறிப்பிடுக.

## செயற்பாடுகள்

★ நால்வரும் புரிந்த அற்புதங்களையும், அப்பொழுது பாடிய பாடல்களின் முதலடிகளையும் அட்டவணைப்படுத்துக.
★ சமயகுரவர் வாழ்வினூடே பக்தி வைராக்கியமும், சமூக அக்கறையும் வெளிப் படுமாற்றை எடுத்துக்காட்டுக.

## பாடச்சுருக்கம்

★ திருநாவுக்கரசர் , திருஞானசம்மந்தர் , சுந்தரமூர்த்தி நாயனார் , மணிவாசகர் நால்வரும் சமய குரவர் என அழைக்கப்படுவர் .
★ சமயகுரவர் கள் இறையருள் பெற்ற அனுபூதி மகான்களாவார் .
★ சமயகுரவர் கள் எத்தகைய இடர் வந்தபோதிலும் இறைநம்பிக்கையை மறவாதவர்கள்.
★ சிவனையும், சிவனடியாரையும் ஒக்கவே நோக்கிய பண்பாளர்கள் சமயகுரவர்கள்.
★ இறையருளால் அற்புதங்கள் நிகழ்த்தி மக்களிடையே இறைநம்பிக்கையை ஊட்டியவர்கள்.
★ மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் என்பதை வாழ்ந்து காட்டிய மகான்கள்.
★ சைவசமயத்தின் எத்தகைய சந்தேகங்களுக்கும் அவர்களது வாழ்க்கையும், அவர்கள் அருளிய திருப்பாடல்களும் விடையாக அமைந்துள்ளன.
★ சமயகுரவர்களின் திருப்பாடல்களை அன்றாடம் ஓதுவதன் மூலம் எத்தகைய இடர்களையும் தாங்கி வாழும் நம்பிக்கையை அளிக்கவல்லது.